# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **10 மார்ச் 2019** | **தவக்காலம் முதல் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு...

இயேசுவின் அன்பார்ந்தவர்களே! தவக்காலத்தின் முதல் ஞாயிறு திருவழிபாட்டிற்கு வந்துள்ள உங்களை அன்புடன் வரவேற்கிறோம். வருடம் ஒரு முறை, திருஅவை இயேசுவின் பாடுகளை மனதில் சிந்தித்து நம்மை மனமாற்றத்திற்கு மீண்டுமாய் அழைக்கிறது.

இறை மனித உறவைப் புதுப்பிக்கும் காலம். இறுகிப்போன இதயங்கள் அன்பில் மீண்டும் துளிர்க்கும் காலம். ஆணவமும், சுயநலங்களும் களையப்பட்டுப் புதிய வாழ்வுப் பெற அழைக்கப்படும் காலம். நாற்பது நாட்கள் என்ற காலக்கட்டம் விவிலியத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பின்னிப் பிணைந்துள்ளதை நாம் காணலாம். இந்த நாற்பது நாட்களின் முடிவில் கிடைத்த வெற்றி அனுபவங்களை நாமும் பெற்று மகிழ அழைக்கப்படுகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ராயேல் மக்கள் இறைவன் தமக்குச் செய்த உதவிகளை நினைத்து கடவுளுக்கு நன்றிக் கடன் செலுத்துவதைக் காட்டுகிறது. நாடோடிகளாக புலம் பெயர்ந்த மக்கள் தாங்கள் சந்தித்த துன்பங்களின் மத்தியிலும், சிறுமைகளின் போதும் வலிய கரத்தாலும் ஓங்கிய புயத்தாலும் இறைவன் தங்களை காத்ததை நினைத்துக் கண்ணீர் சிந்தி நன்றி செலுத்துகின்றனர். பழைய ஏற்பாட்டில் இறைவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவித்து, பாலும், தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு அழைத்துச் சென்றார். புதிய ஏற்பாட்டு இறைவன் பாவம் என்னும் அடிமைத்தனம் விடுத்து, மக்களை புதிய வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார். இயேசுவில் கடவுள் இன்னும் அதிகம் மனுக்குலத்தோடு நெருங்கி வருகின்றார். இயேசுவின் வருகை மனிதர் நடுவில் உள்ள அனைத்து பிரிவுகளையும் அழித்துவிடுகிறது என்கிறார் தூய பவுல்.

நற்செய்தியில் இயேசு தன் பணிவாழ்வை தொடங்குமுன் எதிர்கொண்ட சாத்தானின் சோதனைகளைப் பற்றியும் அவற்றை அவர் எவ்வாறு வெற்றி கொண்டார் என்பதையும் பார்க்கின்றோம். எதற்காக இயேசு 'எங்களுக்குச் சோதனைகள் வேண்டாம்' என்று கற்பிப்பதற்குப் பதில் 'எங்களைச் சோதனையில் விழவிடாதேயும்' என்று இறைவேண்டலைக் கற்பிக்கின்றார். நன்மையும், அன்பும் உருவான எல்லாம் வல்லக் கடவுள் ஏன் தீமையை அனுமதிக்க வேண்டும்? இந்தக் கேள்விகள் எல்லாம் நம் உள்ளத்தில் எழக்கூடியவை. இந்தக் கேள்விகளுக்குப் பதிலாக வருபவைதான் இயேசுவின் சோதனைகள். இதை ஒரு பாலைவன நிகழ்வாக மட்டும் பார்க்காமல் நம் உள்ளத்தில் நிகழும் நன்மைக்கும் - தீமைக்கும் எதிரான போராட்டமாகவும் பார்க்கலாம்.

சாத்தனின் போராட்டங்களை வென்று வெற்றிப் பெறுவோம். இவற்றிக்குத் தேவையான இறையருளையும் சாத்தனை வெல்ல உறுதியான மனத்திடத்தையும் வேண்டி இன்றைய திருப்பலிக் கொண்டாடத்தில் மன்றாடுவோம். வாரீர்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்



ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் கடவுளைப்பற்றிய அறிவிலும் ஞானத்திலும் வளர அவர்களை அனுப்பி வையுங்கள்.



## சிலுவைப்பாதை பக்தி முயற்சி



நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில், தவக்காலத்தின் **ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இரவு 8 மணிக்குத் தமிழில்** சிலுவைப் பாதையும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். இயேசுவின் சிலுவைப் பாடுகளைத் தியானித்து, உள்ளத்தில் மாற்றம் பெற்று தவக்காலத்தை அர்த்தமுள்ள விதத்தில் அனுசரிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (03-03-2019) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4157.75

பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 7070.00

தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## தவக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், தவக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 17-03-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**




ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும்.
வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.




## தவக்கால ஒப்புரவு அருட்சாதனம்



நமது ஆலயத்தில், வருகின்ற 07-04-2019 ஞாயிற்றுக் கிழமை தமிழில் திருப்பலிக்கு முன்னதாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்படும்.

**நேரம்:** காலை 8:45 முதல் 9:30 வரை மற்றும்
மாலை 5:30 முதல் 6:30 வரை.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாவமன்னிப்பு அருட்சாதனம் மூலம் இறையருள் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | இணைச் சட்டம் 26:4-10 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 91: 1-2. 10-11. 12-13. 14-15 |
| **பதிலுரை:** | துன்ப வேளையில் என்னோடு இருந்தருளும், ஆண்டவரே. |
| **இரண்டாம் வாசகம்:** | உரோமையர் 10:8-13 |
| **வாழ்த்தொலி:** | மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல. மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர். |
| **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 4:1-13 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரீசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

